


# “75 வயதானாலும் இளமையுடன் இருக்கும் இயக்கம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் இரண்டாம் அமர்வில் தலைமை வகித்த போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆற்றிய உரை :**

“கட்சிக்கும் இயக்கத்திற்குமான வித்தியாசத்தைக் காட்டுகின்ற வகையில், இது இயங்கிக் கொண்டிருக்கின்ற கட்சி, இயங்கிக்கொண்டிருக்கின்ற கழகம் என்று உணர்த்துகின்ற வகையில், நமக்கான கருத்துகளை எடுத்து வைப்பதற்குப் பல அமர்வுகளை ஏற்பாடு செய்து, இந்த நிகழ்ச்சியை இன்றைக்கு நடத்திக்கொண்டிருப்பது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரமே இருக்கின்ற தனிச் சிறப்பு.

## இளைஞர்களின் இயக்கம்

இந்தியாவில் இளைஞர்களால் கட்டமைக்கப்பட்ட முதல் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். 1949-ல் கழகம் தொடங்கப்பட்டபோது, கழகத்திற்குத் தலைமையேற்று தொடங்கிவைத்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வயது 40. அவருக்கு மாத்திரம்தான் 40. ஆனால், அவருக்கு அடுத்து படை வரிசையில் இருந்த அத்தனை தளபதிகளுக்கும் 30 வயதுக்குக் கீழேதான். தலைவர் கலைஞருக்கு அப்போது வயது 25, பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கு வயது 27, நாவலருக்கு வயது 29.

எல்லோரும் 30 வயதுக்குக் கீழான இளைஞர்கள். 1949-இல் தொடங்கிய இயக்கம், 1967-லிலே ஆட்சிக்கு வருகின்றபொழுது, அந்த இளைஞர்கள் இளம் வயதைத் தாண்டி, நடுத்தர வயதிற்கு வந்து நிற்கின்ற வயதிலே, ஆட்சிப் பொறுப்பை அமைத்த இயக்கமும் இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதற்குப் பிறகு, இந்திய வரலாற்றில் எந்த இயக்கமும் இப்படி இளைஞர்களால் கட்டமைக்கப்பட்டு ஆட்சிக்கு வரவில்லை.

ஒரே ஒரு மாற்று அசாமிலே நடந்தது. 1985-இல் ‘அசாம் கணபரிஷத் கட்சி’ அப்படி உருவானது. அசாமில் மாணவர்களால் ஒரு போராட்ட இயக்கம் நடத்தப்பட்டு, அந்தப் போராட்ட இயக்கத்தின் வெற்றி காரணமாகத் தேர்தலிலே அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற்றனர். அசாம் கணபரிஷத் கட்சியைச் சேர்ந்த பிரபுல்ல குமார் மகந்தா, 35 வயதிலே முதலமைச்சர் ஆனார். அந்த ஆட்சியிலே அன்றைக்குப் பொறுப்பேற்றவர்கள் எல்லாம் மாணவர் இயக்கத்திலே இருந்தவர்கள். ஆனால், அவர்களுக்கும் நமக்குமான வித்தியாசம் 75 ஆண்டுகள் கடந்தும் இன்றைக்கும் இந்த இயக்கம் அதே இளமையோடு நடைபோடுகிறது; அதே வெற்றியோடு நடைபோடுகிறது. ஆனால், இளைஞர்களால் தொடங்கப்பட்ட, இன்னும் சொல்லப்போனால் மாணவர்களால் தொடங்கப்பட்ட அந்த இயக்கம், இரண்டு முறை ஆட்சி அமைத்த பிறகு தொய்வடைந்துவிட்டது.

90களுக்குப் பிறகு பலவீனம் அடைந்து, இப்போது பா.ஜ.க.விற்குத் துணை நிற்கின்ற ஒரு அடியாள் கட்சியாக மாறிவிட்டது. ஆனால் இந்தியாவில், தொடங்கியதிலிருந்து ஒவ்வொரு முறையும் தன்னை உயிர்ப்பித்துக்கொண்டு இயங்குகின்ற இயக்கமாக இந்த திராவிட முன்னேற்றக் கழகம்தான் இருக்கின்றது.

## இளைய ரத்தம்... புதிய ரத்தம்!

இளைஞர்களால் தொடங்கப்பட்ட கட்சி, ஒரு கட்டத்தில் அந்த இளைஞர்களெல்லாம் தலைவர்களாகி, அவர்கள் வழிநடத்துகின்ற நேரத்தில்தான் மீண்டும் அந்த இளைஞர்களைப் புதுப்பிக்கின்ற வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியை நம்முடைய கழகத் தலைவர் திராவிட மாடல் முதல்வர், திராவிட நாயகர் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மீண்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இளைஞர் சக்தி நிரம்பி, இளைய ரத்தம் பாய்ச்சப்பட்டது. இன்றைக்கு அதே போல் நம்முடைய கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய தலைமையில் இளைஞர் அணி புதுப்பிக்கப்பட்டு, புதிய ரத்தம் பாய்ச்சப்பட்டு, எதையும் சந்திப்பதற்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருக்கிறது.



**எஸ்.எஸ்.சிவசங்கர்**
**போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**

அந்த இளைஞர் அணி, இன்றைக்கு அடுத்த தலைமுறை இளைஞர்களைக் கொள்கைரீதியாக, இலட்சியரீதியாகத் தயார்படுத்துவதற்காக நம்முடைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் எடுத்துவருகின்ற பல்வேறு முன்னெடுப்புகளின் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு அறிவுத் திருவிழா நடைபெறுகிறது. இந்த அறிவுத் திருவிழாவின் செய்தியை, மாநிலம் எங்கும் கொண்டு சேர்க்கின்ற பணி கழகத்தின் இளைஞர் அணித் தோழர்களுக்கும் புதிதாக அடையாளம் காணப்பட்டிருக்கின்ற இளம் சொற்பொழிவாளர்களுக்கும் இருக்கிறது.

## இது நமக்கான பணி!

இந்த அமர்வு என்பது ஊடகவியல் நிபுணர்கள் பங்கேற்கின்ற ஒரு நிகழ்வாக அமைந்திருக்கின்றது. இப்போதைய மிக முக்கியமான தேவை இது.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பிறகுதான். பேச்சிற்கான வலிமை மக்களிடத்திலே கொண்டு சேர்க்கப்பட்டது. மக்களுக்கான கருத்துகளைக் கொண்டு சேர்க்கின்ற பணியை முழுமையாகச் செய்த இயக்கம், திராவிட இயக்கம்தான். அதனால்தான் இது அறிவு இயக்கம். எனவே, அந்தப் பணியைத் தொடர்ந்து செய்யும் கடமை நம் தோளிலே ஏறியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் ஒரு மகத்தான பணியைத் திராவிட இயக்கப் பேச்சாளர்கள் செய்ததுபோல பத்திரிகையாளர்களும் செய்தார்கள். அந்த காலகட்டத்தில், நூற்றுக்கணக்கான பத்திரிகைகள் திராவிட இயக்கம் சார்பாக நடத்தப்பட்டன. ‘குடியரசு’, ‘விடுதலை’, ‘முரசொலி’, ‘திராவிட நாடு’, ‘மன்றம்’ ‘தென்றல்’ என்று நூற்றுக்கணக்கான ஏடுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை, கிராமங்கள்தோறும் கொண்டு சேர்த்தன.

அச்சுப் பத்திரிகைகளுக்கான காலத்தின் தேவை என்பது குறைந்துவிட்ட சூழலில், குறிப்பிட்ட சில பத்திரிகைகள் மாத்திரம் இப்போது இயங்கிவருகின்றன. ஆனால், இன்றைய காலகட்டத்தில் இந்துத்துவா சக்திகள் தங்கள் கையிலே பெரும் ஊடக கார்ப்பரேட் நிறுவனங்களை வைத்துக்கொண்டு, தாங்கள் நினைப்பதையெல்லாம் மக்களிடம் செய்தியாகக் கொண்டுசேர்க்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றபோது, அதை எதிர்த்து நாம் ஒவ்வொருவரும் ஊடகமாகச் செயல்படவேண்டிய தேவை வந்திருக்கிறது.

பத்திரிகைக்குப் பிறகு செய்தி ஊடகம் வந்தது. செய்தி ஊடகத்திற்குப் பிறகு, சுயாதீன சுதந்திர ஊடகமாக இணையத்தில் ஒவ்வொருவரும் செயல்படத் துவங்கியிருக்கின்ற காலகட்டம் இது. இன்னும் சொல்லப்போனால், நம்முடைய முதல்வரே ஒரு சுதந்திர ஊடகமாகத்தான் செயல்படுகிறார். பல நேரங்களில், முக்கியமான செய்திகளை அவரே நேரடியாகத் தொண்டர்களுக்கும் மக்களுக்கும் கொண்டு சேர்க்கின்ற பணியைச் செய்கிறார். எனவே, இந்தப் பணி என்பது மிக அவசியமான பணி, இந்தக் காலத்திற்கான பணி. அந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்கின்றவர்கள், இந்த மேடையில் அமர்ந்திருக்கிறார்கள்.

நம்முடைய திராவிட மாடல், முதல்வர் ஏந்தியிருக்கின்ற திராவிட மாடல் இயக்கத்தினுடைய பணியைத் திக்கெட்டும் கொண்டு சேர்க்கின்ற கடமையை நாம் செய்ய வேண்டும்.”





## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**‘இளையோர் குவிந்த அறிவுத் திருவிழா’ என்ற தலைப்பில், ‘மெட்ராஸ் குரல்’ இணையதளத்தில் வெளியான கட்டுரையில் இருந்து...**

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், இளையோர் திருவிழாபோல நடந்து முடிந்திருக்கிறது, ‘அறிவுத் திருவிழா’. அரசியல் நூல்களின் அணிவகுப்பு என்ற அடையாளத்துடன் ‘முற்போக்கு புத்தகக் காட்சி’, 2025 நவம்பர் – 8 முதல் 16 ஆம் தேதி வரை நடைபெற்றது. தி.மு.க. இளைஞர் அணி செய்து முடித்த மகத்தான சேவை – சாதனை என்றே ஒற்றை வரியில் இதைக் கூறிவிடலாம். புத்தகக் கண்காட்சி என்பதைத் தாண்டி, குடிநீர் மற்றும் உணவு ஏற்பாடுகளும் வெகு சிறப்பாக இருந்தது. நூல் அரங்கிற்கு வந்து போவோர், விலை கொடுத்து நூல்களை வாங்குவோர், வாசிப்போர் என அனைத்துத் தரப்பும் பாதுகாப்பு உணர்வோடு சொந்த நூலகத்தை அணுகுவதுபோல அணுகும் வகையில், ஆகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம், தமிழ்த்தேசியம், பெண்ணியம் என்று வகைப்படுத்தப்பட்ட புத்தகங்கள் மட்டுமே கண்காட்சியில் இடம்பெற்றிருந்தது சிறப்பு எனலாம். கண்காட்சி அரங்கிற்குள் எந்த வாசகர் வரக்கூடும் என்று முன்னரே தெளிவாகக் கணித்திருந்தனர் என்றே சொல்ல வேண்டும். தி.மு.க. இளைஞர் அணியின் கணிப்பு பொய்த்துப்போய், எட்டுநாள் கண்காட்சியும் கெட்டுத்தான் போகுமென்று யாரேனும் நினைத்திருந்தால், அதுதான் கெட்டுப் போயிருக்கும் என்கிற அளவு புத்தக விற்பனை களைகட்டியது.

கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் அரங்கின் விழா அரங்கைத் தங்களுடைய கருத்துரைகளால் கட்டிப்போட்டனர். குறிப்பாக, தி.மு.க. ‘ஐ.டி. விங்’ ஆலோசகரும் மூத்த பத்திரிகையாளருமான கோவி.லெனின், பத்திரிகையாளர் சுகுணா திவாகர் உள்ளிட்டோரின் வீச்சு, அதிர்வலைகளை உண்டாக்கின.

குளிரூட்டப்பட்ட அரங்கத்தில் 46 பதிப்பகங்கள் அரங்குகளை அமைத்திருந்தன. முதல் நாளே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்ற நூலின் விற்பனை அரங்கு முதலில் இருந்தது. அங்கே, தி.மு.க. இளைஞர் அணியினர் குவிந்திருந்தனர்.

‘காலத்தின் நிறம் கருப்பு – சிவப்பு’ நூல் முழுமையாக, உறுதுணையாய் நின்ற திராவிட இயக்க மூத்த எழுத்தாளர் திருநாவுக்கரசு, பத்திரிகையாளர் ஃப்ரன்ட் லைன் விஜயசங்கர் உள்ளிட்டோரை நேரில் தேடிப்போய் சந்தித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நன்றி தெரிவித்துத் திரும்பிய கையோடு, நடந்தேறிய புத்தகக் காட்சி என்பதும் முன்கூட்டியே எதிர்பார்ப்புகளை எகிற வைத்தது எனலாம்.